
# ஜாமக்காரன்

WATCHMAN



காவல்காரன்

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

நம்மை எல்லாம் அவருடைய பிள்ளைகளாக்கவும், நம் எல்லாருக்காகவும், பாவ விமோச்சகாரக, சாவதெற்கென்றே திட்டமிட்டு பிறந்து, மரித்து இப்போதும் உயிரோடிருக்கிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்து கூறுகிறேன்.

' கடந்த மாதங்கள் அநேக ஆயிரம் மைல்கள் பயணித்து பல்வேறு நாடுகளுக்கு சென்று சுகத்தோடும், ஆசீர்வாதத்துடனும் இந்தியா திரும்பினேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மறுபடியும் இந்தியாவில் தொடர்ந்து ஊழியத்தை செய்ய கர்த்தர் அருள்புரிந்தார்.

' நான் இந்தியா திரும்பிய நேரத்தில் வானத்தில் ஓட்டை விழுந்ததுபோல் மழை கொட்டிக்கொண்டிருந்தது. நான் வந்த விமானம்தான் கடைசியாக சென்னை விமான நிலையத்தில் இறங்கியது. அதன்பின் வந்த விமானங்கள் யாவையும் சென்னை விமான நிலையத்தில் இறங்கவிடாமல், மழையின் காரணமாய் திருப்பிவிடப்பட்டதாக அறிந்தேன். விமானம் இறங்கும் பாதையெல்லாம் மழை வெள்ளம். இரண்டு சிறிய விமானங்களை மழை வெற்றம் அருகில் உள்ள மரங்களின் புதரில் ஒதுக்கிவிட்டது.

' துபாயிலிருந்து 4 மணி நேரத்தில் சென்னை வந்து சேர்ந்தேன். ஆனால்சென்னை விமான நிலையத்திலிருந்து சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தடைய 3.1/2 மணி நேரமாகியது. சென்னை சாலை அத்தனையும் மோசமான நிலையில் இருந்தது.

' தமிழ்நாட்டின் தலைநகரமாகிய சென்னை மாநகரம் வெள்ளத்தில் மூழ்கி சரித்திரம் படைத்தது. 100 வருடங்களுக்கு முன் இதே மாதிரி சென்னை நகரம் வெள்ளத்தில் மூழ்கியதாக கூறப்படுகிறது.

## சென்னைக்கு ஏன் இத்தனை பெரிய வெள்ள அழிவு?.

' காரணம், ஏரிகளை கவனிக்கும் உயர் பொறியாளர்(Engineer)அதிகாரிகளின் அலட்சியமாகும்.

# டிசம்பர் 2015

' பெரிய பெரிய பணக்காரர்கள் லட்சாதிபதிகள் யாவரும் 3பகல்,3 இரவு மின்சாரம் இல்லாமல்,மொபைல் சார்ஜ் செய்யமுடியாமல் யாரோடும் தொடர்புக்கொள்ள முடியவில்லை. போலீஸ் ஆம்புலன்ஸ் யாவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய தயார். ஆனால் வெள்ளம் காரணமாக யாருடைய வீட்டின் வீதிகளுக்கும் அந்த உதவும் வாகனம் செல்லமுடியாமல்போனதால் உதவியாளர் அங்கு சென்று மக்களை விடுவித்து வெளியே கொண்டு வழியில்லாமல்போனது.

கோடிஸ்வரர்களின் குளிர்சாதன பெட்டிக்கு மின்சாரம் இல்லாதுபோனதால் முதல்நாள் உணவு உட்க்கொண்டவர்,இரண்டாம் நாள் உணவு சாப்பிட வழியின்றி விமானத்திலிருந்தும், ஹெலிகாப்டரிலிருந்தும் அவர்கள் போடும் சாப்பாடு பொட்டலங்களுக்கு பிச்சைக்காரர்கள்போல் இரண்டு கைகளையும் அசைத்து கெஞ்சியது பரிதாபமாக இருந்தது. லட்சக்கணக்கில் ATMல் பணம் உண்டு, எடுக்கமுடியவில்லை!. வங்கியில் கோடிக்கணக்கில் பணம் உண்டு. பயன் இல்லை.

தனி பங்களாவில் குடியிருந்தவர்கள் கல்யாண மண்டபத்தில் படுத்திருந்தார்கள். அடுக்குமாடியில் குடியிருந்தவர்களின் நிலை இன்னும் பரிதாபமானது.

## மனித வாழ்க்கை இவ்வளவுதான்.

' பணம் இருந்தும்-பொருள் வாங்க முடியாத நிலை. சென்னை முழுவதும் முதல் இரண்டு மாடி கட்டிடங்கள் வரை தண்ணீர் நிறைந்துவிட்டது. ஆனால் தாகத்துக்கு அந்த தண்ணீர் குடிக்கமுடியாதபடி சாக்கடை நீர் கலந்து தேளும்,பூரானும்,பாம்புகளும் நீந்திவர ஒவ்வொரு வீட்டிலும் குடியிருந்தவர்களின் நிலை அந்த நாட்களில் மிகப்பரிதாபம்!. ராணுவ பாதுகாப்பு படையினர் வந்தபின் 3வது நாள் ரப்பர் படகில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஆட்களை ஏற்றி சென்னைக்கு அப்பால் கல்யாண மண்டபத்திலும்,மசூதிகளிலும்,தேவாலயங்களிலும்,பள்ளிக்கூடங்களிலும் கொண்டுபோய்விட்டார்கள். பிரபல சினிமா நடிகை லட்சுமி முதல் பல பணக்காரர்கள் வரை இப்படி காப்பாற்றபட்டார்கள். மழை நிற்காமல் பெய்து கொண்டிருக்க இவர்கள் இரவு முழுவதுமாக நனைந்த உடையோடு அந்த மண்டபத்தில் சமபந்தி உணவுபோல ஏழை,பிச்சைக்காரர்,பணக்காரர் என வித்தியாசம் இல்லாமல் அத்தனை பேர்களுடன் அருகருகே அமர்ந்து சாப்பிட்டார்கள். அவர்கள் அனைவரும் கூட்டமாக ஈர துணியுடன் படுத்த நிலை எப்படியிருக்கும் யோசித்துப் பாருங்கள். ஏழைய இங்கே? பணக்காரனும் இங்கே? இந்த சூழ்நிலையில் இவர்கள் யாவரும் சென்னையில் அனுபவித்த சமரச அனுபவம் நல்ல செயல்முறை அனுபவமாகும்.

' நோவாவின் காலத்தை நினைத்துக்கொள்ளுங்கள் என்று இயேசுகிறிஸ்து கூறியது எத்தனை உண்மை?

## இங்கு ஒரு கேள்வி எழுகிறது?

பூகம்பத்தைவிட மிகப்பெரிய நாசத்தை விளைவித்த மழைவெள்ள தாக்குதலைப்பற்றி அறிவிக்காமல்போன நம் கள்ள தீர்க்கதரிசிகள் எங்கே? ஜெபத்தில் கர்த்தர் பெயரை காட்டினார் என்று கூறிய தீர்க்கதரிசிகள் எங்கே? ஒவ்வொரு புதுவருடத்துக்கும் வானிலை அறிக்கை வாசிப்பதுபோல உலகநாடுகள் முழுவதைப்பற்றியும் வாய்கூசாமல் பொய் தீர்க்கதரிசனம் சொல்லும் அந்த திருட்டு தீர்க்கதரிசிகளுக்கு சென்னை-கடலூர் வெள்ள அழிவை அறிவிக்காதது ஏன்? அந்த ஏஞ்சல் டிவியில் காட்சியளிக்கும் மும்மூர்த்திகள் மழையைப்பற்றி தீர்க்கதரிசனம் கூறமுடியாதா? ஏஞ்சல் டிவி எங்கே?ஆசீர்வாதம் டிவி எங்கே?தினசரி பரலோகமும், நரகமும்

டூர் அடிக்கும் கள்ளதீர்க்கதரிசி பேர்வழிகள் யாருக்கும் சென்னை, கடலூர் மாவட்டங்களில் பெய்த மழையைப்பற்றியயும், வெள்ள சேதத்தைப்பற்றியும் இவர்களுக்கு உதவி செய்யும் எந்த தெய்வமும் இவர்களுக்கு தீர்க்கதரிசனமாக அவைகளை வெளிப்படுத்தவில்லையா?. மக்கள் கேட்கிறார்களே? பதில் சொல்ல இவர்கள் கடமைபட்டுள்ளார்கள்?

கடலூரில் கடந்த காலத்தில் புயல் வீசியபோது கடலுருக்கு உதவி செய்து ஜெபநடை பயணம் மேற்கொண்டு ஒவ்வொரு ஊருக்கும் கிராமத்துக்கும் சென்று ஜெபம் ஏறெடுத்த பின்னும் இப்படியொரு கொடிய வெள்ளசேதம் கடலுருக்கு உண்டாகலாமா?. இவர்கள் ஜெபித்த கிராமங்களில் 3 கிராமங்கள் அடியோடு வெள்ளத்தில் மூழ்கி மக்கள் உயிரிழந்தது எப்படி? அப்படி ஒரு கிராமம் அங்கு இருந்ததாக இனி பஞ்சாயத்து மேப்பில் கூட இனி குறிக்கமுடியாதே?

கிறிஸ்தவ சபைமக்கள்,சபை பிஷப்மார்கள் இனிமேலும் இவர்களோடு அமர்ந்து புகைப்படத்துக்கு போஸ் கொடுத்து கொண்டு இருந்தால் அதைவிட வெட்கக்கேடு வேறு இல்லை.

‘ நான் சென்ற தேசங்களிலெல்லாம் மக்கள் இந்த கள்ளதீர்க்கதரிசிகளைப்பற்றி நல்ல விழிப்புணர்வுடன் இருப்பதைக்கண்டு தேவனைத்துதிக்கிறேன்.

‘ நான் சென்று வந்த ஒரு நாட்டில் ஒருவர்தன் குடும்பத்துடன் என்னை தனியாக சந்தித்து உங்களை மிகவும் வெறுத்தேன். உங்கள் பத்திரிக்கையையும் வெறுத்தேன். ஆனால் இந்த கள்ளதீர்க்கதரிசிகளின் செயல்கள் யாவும் வெறும் வியாபாரம் என்று உணர்ந்தவுடன் எங்கள் மனம் உடைந்தது.

உங்கள் ஞாபகம் வந்து பழைய ஜாமக்காரனை பலரிடம் கேட்டு வாங்கி வாசித்த பின் எழுதிய அத்தனையும் நூற்றுக்குநூறு உண்மை என்று விளங்கியது என்று கண் கலங்கி கூறினார்.

‘ ஊருக்கு ஒரு ஜெப கோபுரம் கட்டி என்ன பிரயோஜனம். சென்னை -கடலூரில் இவ்வளவு பெரிய அழிவு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அழிவில் ஜெபகோபுரமும் மூழ்கியிருக்குமோ? ஆனால் இந்த கள்ளதீர்க்கதரிசிகள் யாவரும் (இவ்வளவு பேரழிவிலும்)உல்லாச ஜீவியம் செய்து அதி நவீன புத்தம் புதிய விலை உயர்ந்த கார்களில் பவனி வந்துக்கொண்டிருக்கின்றனர்.

‘ சென்னை-கடலூர் வெள்ளத்தைப்பற்றி தீர்க்கதரிசனம் கூறாத அத்தனை ஊழியர்களைப்பற்றி அவர்கள் முகத்திரையை கிழிக்கும் வகையில் என்னைப்போன்றவர்களை அழைத்து டிவியில் செய்தி கொடுக்க பலர் டிவி சேனல்களை புக் செய்து நிகழ்ச்சியை தயாரிக்க பணம் தயாராக வைத்திருக்கிறார்கள். கால் மணி நேரம் செய்தி கொடுங்கள். அப்போதாவது மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாகாதா? என்று வெல்லூர்,நெய்வேலி,சென்னை ஆகிய இடங்களிலிருந்து என் ஆவிக்குரிய சகோதரர்கள் பலர் என்னிடம் கேட்டார்கள்.

‘ வழக்கம்போல எனக்கு நேரம் இல்லை என்றுதான் அவர்களுக்கு என்னால் பதில் கூற முடிந்தது.

‘ சென்னையில் பணக்காரர்கள் அடுக்குமாடியில் குடியிருப்பவர்களின் நிலையே இப்படியென்றால் குடிசை வாழ் மக்களின் நிலை மிகப்பரிதாபம்?.

ஜெபிப்போம். இவர்களுக்கு உதவி செய்யும் தன்னர்வ தொண்டு நிறுவனங்களுக்கும் டிவி நிலையத்தினர் குறிப்பிட்டுள்ள தொண்டு நிலையத்தோடு தொடர்புக்கொண்டு உங்களால் இயன்ற உதவிகளை செய்ய தயங்கவேண்டாம். கிறிஸ்தவ அன்பை பாதிக்கப்பட்டவர்களுக்கு காண்பிக்க இது நல்ல சந்தர்ப்பம்.

‘ மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக எனக்கு காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.

‘ தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

தேவ கிருபையும், சமாதானமும் உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கர்த்தரின் உன்னத பணியில்

✍ டாக்டர். புஷ்பராஜ்

‘ **சென்னை-கடலூர் வெள்ள அழிவு நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடம்:**

**வெள்ள அழிவில் பலருடைய வீட்டுமனை பத்திரங்கள், பாஸ்போர்ட், கல்லூரி சர்ட்டிபிகேட், டிரைவிங் லைசன்ஸ், பேங்க் பாஸ்புக், ரேஷன் கார்டு யாவும் முழுவதும் வெள்ளத்தில் அழிந்துபோயின. இனிமேலேயாவது குறிப்பிட்ட முக்கியமான விவரங்களை ஸ்கேன் செய்து பென்-டிரைவ்வில் பதித்து வைத்துக்கொள்ளுங்கள். அதையும் இரண்டு பென்-டிரைவ்களில் பதித்து இரண்டு வெவ்வேறு இடங்களில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும். இந்த ஆலோசனை நல்லது என்று உணர்ந்தால் சீக்கிரமே செயல்படுங்கள். கர்த்தர் நல்லவர்.**

‘ **சென்னை- கடலூர் மக்களுக்காக தொடர்ந்து எல்லாரும் இணைந்து ஜெபம் ஏறெடுப்போம்.**

**ஜாமக்காரன் பத்திரிக்கை வெளியிடுவதில் தாமதம்:**

**தமிழ், மலையாளம் ஜாமக்காரன் பத்திரிக்கையை ஒவ்வொரு மாதமும் வெளியிட வேண்டியிருப்பதாலும், எனக்கு எழுத நேரம் இல்லாததாலும் ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரன் குறிப்பிட்ட தேதியில் வெளியிட இயலாது. பல்வேறு தேதிகளில் மிக தாமதமாகத்தான் வந்து சேரும் ன்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறேன்.**

**ஜாமக்காரனை விட எனக்கு மற்ற சுவிசேஷ ஊழியம் மிக முக்கியம். ஆகவே ஜாமக்காரன் தாமதமாகத்தான் வரும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.**

## FMPBயின் முதல் மிஷனரி யார்?


FMPBயின் அதிகாரப்பூர்வ பத்திரிக்கையான **அறைகூவலில்** அவர்கள் Rev.Dr.J.T.K.DANIEL அவர்கள் FMPB மிஷனரி ஸ்தாபன மூலமாக **பெரியமலை** சென்ற முதல் மிஷனரி யார்? என்பதில் தவறான தகவலை எழுதியிருக்கிறார். அதைக்குறித்து தமிழ்நாட்டு மக்களைவிட கேரள FMPB வாசகர்கள் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். இதற்கான சரியான பதிலை FMPBயின் அறைகூவல் ஆசிரியர்தான் விளக்கம் அளிக்கவேண்டும் அல்லது சகோ.J.T.K.டேனியல் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டும்.

J.T.K.DANIEL அவர்களுக்கு இதைக்குறித்து பல ஆதாரங்களோடு கடிதம் எழுதியிருக்கிறேன். அவரிடமிருந்து பதில் கிடைத்தபின் என் விளக்கத்தை நான் வெளியிடுவேன். FMPBயின் பொது செயலர் தெரிந்தெடுப்பில் கடந்த இரண்டு பொது செயலர்களும் தகுதியில்லாதவர்களாக தெரிந்தெடுக்கப்பட்ட குளறுபடிபோல FMPBயின் சரித்திரம் எழுதுவதிலும் குளறுபடியும் பல இருட்டடிப்புகளும் ஏற்பட்டுவிட்டது.

# சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு: CSI பிஷப்மார்களின் பதவி மோகம்



பிஷப்.தேவகடாட்சம்
(நாகர்கோவில்)



மாடரேட்டர்.
தேவாசீர்வாதம்



உதவி மாடரேட்டர்
பிஷப்.தாமஸ் K.உம்மன்
(கோட்டயம்)

## ஓய்வுவயது உயர்த்தும் CSI சட்டத்திருத்த மாசோதவை நிறைவேற்ற முயற்சிக்கும் CSIயின் மும்மூர்த்திகள்:

ஆயர்களின் ஓய்வு வயதை 65லிருந்து 68ஆக உயர்த்தும் திட்டத்துக்கு CSIயின் சட்டத்தில் திருத்தம் AMENDMENT கொண்டுவர CSIயில் உள்ள மொத்தம் 24 டையோசிஸ்களில் அவசர கமிட்டி கூட்டி சட்டதிருத்தத்துக்கு தேர்தல் நடத்தி CSI சினாடுக்கு அறிவிக்கவேண்டும் என்று CSI சினாடு மூலம் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது.



பிஷப்.தேவகடாட்சம்

இது விஷயமாக சட்டதிருத்தம் கொண்டுவர CSIயில் பெரும்பாலான வர்களுக்கு ஒப்புதல் இல்லை. பெரும்பாலான பிஷப்மார்களுக்கும், ஆயர்களுக்கும் இதில் ஒப்புதல் இல்லை.

இந்த திட்டத்துக்கு முழு முதல் காரணம் கன்னியாகுமரி CSI திருமண்டல பிஷப்பும்,முன்னாள் மாடரேட்டருமான **Most.Rev. தேவகடாட்சம்** அவர்கள் ஆகும். இவர் மாடரேட்டராக பதவியில் இருந்தபோது இந்த சட்ட திருத்தம் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டைசெய்தபின் இவர் மாடரேட்டர் பதவியிலிருந்து ஓய்வுபெற்று கன்னியாகுமரி பிஷப்பாக தன் பதவியில் தொடர்ந்தார்.



மாடரேட்டர்.
தேவாசீர்வாதம்

புது மாடரேட்டராக பதவி வகித்த **Most Rev.Dr.G.தேவாசீர்வாதம்** அவர்கள் தான் ஓய்வுபெருவதற்க்குள் அதாவது 2016 ஜனவரியில் ஒய்வுபெருவதற்குமுன் எப்படியாவது சட்டதிருத்தத்தை கொண்டுவர வேண்டும் என்று ஒவ்வொரு பிஷப்மார்களை அழைத்து தனித்தனியாக பேசி சில பிஷப்மார்கள் மேல் சினாடுக்கு அவர்களுக்கு எதிராக வந்த சில குற்றச் சாட்டுகளைக் காட்டி அவர்களை பயமுறுத்தி உதவி மாடரேட்டராக உள்ள

Rt.Rev.Dr. **தாமஸ் கே.உம்மன்** அவர்களை மாடரேட்டர் அவர்கள் தன் Veto பவர் மூலம் அவரை அடுத்த மாடரேட்டராக தன்னால் ஆக்கமுடியும் என்ற ஆசையை காட்டி இப்படி ஒவ்வொரு பிஷப்மார்களின் திருமண்டலத்தில் அவசர கட்டாய தேர்தல் நடத்தி **சட்டதிருத்த மசோதாவை** நிறைவேற்ற சினாட்மூலம் கேட்டுக் கொண்டதாக சினாடிலேயே சிலர் பேசிக்கொண்டதாக தகவல். எல்லா டையோசிஸ் ஆயர்களுக்கு இந்த சட்டதிருத்தம் மூலம் உங்கள் எல்லாருடைய ஓய்வு வயது 68ஆக உயரும் என்று ஆசை காட்டியுள்ளார்கள். ஏதோ இந்த சட்டதிருத்தம் ஆயர்களின் மேல் இவர்கள் பரிதாபம் கொள்வதைப்போல் காட்டிக்கொண்டார்கள். இது மழையில் நனையும் ஆட்டுக்காக ஓநாய் கண்ணீர் விட்டதுபோல உள்ள பெரிய வஞ்சனையாகும்.

ஒவ்வொரு திருமண்டத்திலும் முறையற்ற வழியில் சட்டத்துக்கு முரணாக அவசர அவசரமாக தேர்தலை நடத்தி பல இடத்தில் நடந்த தேர்தலில் வாய்மொழியோ,இரகசிய ஒட்டெடுப்போ, கை உயர்த்தியோ ஒட்டு எண்ணிக்கையை கணக்கொடுக்காமல் பல இடங்களில் தேர்தல் சமயத்தில் நாற்காலிகள் வீசப்பட்டது. குறிப்பாக திருநெல்வேலி டையோசிஸ்ஸில் தேர்தல் நடத்தும்போது பிஷப் பேச முயன்ற அந்த நிமிடத்தில் **மைக்** பிடுங்கப்பட்டு ஒட்டுபோட வந்தவர்களுக்குள் கை கலப்பு உண்டாகும் நேரத்தில் சட்டதிருத்தம் நிறைவேற்றப்பட்டது என்று சத்தமாக கூறி போலீஸ் பாதுகாப்புடன் **பிஷப்.J.J.கிறிஸ்துதாஸ்** அவர்கள் காரில் ஏறி போய்விட்டார். பக்திக்கும்,ஜெபத்துக்கும், மிஷனரிகளை அனுப்பும் விஷயத்திலும் ஆத்மீக விஷயத்திலும் சிறப்புபெற்ற நெல்லை திருமண்டல பிஷப் அவர்கள் **தன் பதவி நீடிக்க, தன் ஓய்வுவயது நீடிக்க** இத்தனை மோசமான வழியை பின்பற்றுவார் என்று யாருமே எதிர்ப்பார்க்கவில்லை. அன்று பிஷப் அவர்கள் **தேர்தலை நடத்திய விதம்** அவமானத்துக்குரியது ஆகும். அது பதவிக்கு வேண்டி செய்த பிசாசின் குறுக்கு வழியாகும்.

**‘ திருநெல்வேலி சிஎஸ்ஐ டையோசிஸ் பிஷப் Rt.Rev.JJ.கிறிஸ்துதாஸ் அவர்களிடம் மற்ற டையோசிஸ்ஸல் உள்ளவர்களும், நெல்லை சிஎஸ்ஐ மக்களும் கேட்கும் கேள்வி?**

நீங்கள் **சட்டதிருத்த மசோதா** சம்பந்தமான தேர்தலை நடத்தினீர்களே? உங்கள் மனசாட்சியின்படியும் கர்த்தருக்கு முன்பாகவும் நீங்கள் நடத்திய தேர்தல் நம் சிஎஸ்ஐ சட்டத்துக்கு உட்பட்டதுதானா?சட்டதிருத்தம் வெற்றிபெற்றதாக அறிவித்தீர்களே? அது சரியான உண்மையான வெற்றிதானா? தயவுசெய்து **நற்போதகம்** பத்திரிக்கை வாயிலாக அறிவியுங்கள்.

உங்கள் நெல்லை திருமண்டலத்தில் ஒவ்வொரு சபையிலும் நடத்தப்படும் டையோசிஸ் எலக்ஷனில் இதே மாதிரி நிலை ஏற்பட்டு சண்டையும், சச்சரவும் ஏற்பட்டு சபையின் **ஆயர்** தனக்கு சாதகமான கமிட்டி ஜெயித்து விட்டது என்று அறிவிப்பாரானால் பிஷப்பும், தலைவருமான நீங்கள் அந்த எலக்ஷனை அங்கீகரிப்பீர்களா?

நியாயம் சொல்ல வேண்டிய இடத்தில் அமர்ந்திருக்கும் நீங்களே சட்டதிருத்த மசோதா தேர்தலில் **நியாயமில்லாமல்** ஒரு தீர்ப்பை அறிவித்திருக்கிறீர்களே? உங்கள் தலைமையில் உளள் சபைகளுக்கு ஆயர்களுக்கு இந்த தேர்தல் சம்பவம் மூலமாக அறிவிப்பதென்ன? இந்த லட்சணத்தில் தேர்தலை கடமைக்காக ஜெபம் செய்து தொடங்கியிருக்கிறீர்கள்? கர்த்தர் அந்த நிகழ்ச்சிகளை கண்டுகொண்டுதானே இருந்தார்? கர்த்தருக்கு உங்கள் செய்கை சந்தோஷம் கொடுத்திருக்குமா? பெங்களுரிலிருந்து ஒருவர் கேட்கிறார். நெல்லை பிஷப் அவர்களை மிகவும் பெருமையாக எண்ணியிருந்தேனே? நானும் திருநெல்வேலி சபையின் அங்கத்தினன் தான் என்று வேதனையுடன் அறிவித்தார்.

கேரளாவில் உள்ளவர்கள் ஜாமக்காரனில் நெல்லை தேர்தல் புகைப்படத்தை கண்டு எனக்கு தெரிந்த பல பிஷப்மார் ஆச்சரியத்தோடு என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள். கேரளா **மனோரமா தினசரி** பத்திரிக்கையில் ஒரு சின்ன மூலையில் நம் நெல்லை தேர்தல் அடிதடி என்ற தலைப்பில் வந்த செய்தி நம் நெல்லை திருமண்டலத்தின்மேல் உள்ள நல்ல அபிப்ராயத்தில் கருப்பு புள்ளி விழுந்துவிட்டதே?

கிறிஸ்தவர்களுக்கு சாட்சி முக்கியம். ஆயர்கள் உங்கள் செய்கையை எப்படி பின்பற்ற போகிறார்கள். நீங்கள்தானே சாட்சி. நாளை உங்கள் திருமண்டலத்தில் ஒரு ஆயர் தேர்தலை நீங்கள் நடத்தியபடி நடத்தினால் அவரைப்பார்த்து ஏன் இப்படி தேர்தலை நடத்தினாய் என்று உங்களால் கேட்கமுடியுமா? அப்படி நீங்கள் கேட்டால் தைரியமுள்ள ஆயர் நீங்கள் யோக்கியமா? என்று ஒரு கேள்வி கேட்டுவிட்டால் உங்கள் நிலை எப்படியிருக்கும்? ஜெபிக்கிறேன்.

## கேக் வெட்டி மிக ஆடம்பரம்:

24 திருமண்டலத்தில் மூன்றில் இரண்டு பங்கு தேர்தலில் வெற்றிபெறவேண்டும் அந்த கணக்கின்படி சட்டதிருத்த மசோதா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு வெற்றி விழா எடுக்கப்பட்டது.

கன்னியாகுமரி திருமண்டலத்தில் தேர்தல் வெற்றி பெற்றதாக **பிஷப். தேவகடாட்சம்** அவர்கள் அறிவித்து **கேக் வெட்டி மிக ஆடம்பரமாக** பத்திரிக்கை நிருபர்களை அழைத்து வெற்றிவிழா கொண்டாடினார். சாட்சில்லா கொண்டாட்டம் அது. பிஷப்கூடஇருந்தவர்களுக்கும் இந்த சட்டத் திருத்தம் தேவையற்றது என்று மிக நன்றாக தெரியும்.



நாகர்கோவில் சிஎஸ்ஐ கம்யூனிட்டி ஹாலில் நடந்த நன்றி கூடுகை நிகழ்ச்சியில் பிஷப் தேவகடாட்சம் கேக் வெட்டினார்.

' இந்தியாவின் அனைத்து மாநிலத்திலும் அரசாங்க அலுவலர்களின் ஒய்வு வயதை குறைத்துக் கொண்டே வருகிறார்கள் காரணம். இளைஞர்களுக்கும் பதவியிலும், பதவி உயர்விலும் வாய்ப்பளிக்க ஒய்வு வயதை 65லிருந்து 63ஆக்க அதன்பின் 60 வயது என்றாக்கி சில மாநிலங்களில் ஒய்வு வயது 58 என்று ஆக்கி இப்போது கேரளாவில்மட்டும் ஒய்வு வயதும் 55 என்று முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

உலக மக்களே ஒய்வு வயதை குறைத்து மற்றவர்களுக்கு வழி உண்டாக்கி கொடுக்கும்போது பிஷப்மார்கள் மற்ற ஆயர்களுக்கு அந்த பதவிக்கு வாய்பளிக்காமல் தாங்களே பதவியில் நீடிக்க வெறிப்பிடித்து அலைவது ஏன்?.

ஆண்டவர் அனுமதிக்காதது எனக்கு வேண்டாம் என்று கூறவேண்டிய பிஷப்மார்கள் பதவியில் நீடிக்க எதையும் செய்ய தயராக இருக்கிறார்கள்!.

இந்த பதவியில் **ஆதாயம் இல்லாமல்** இப்படி பதவி வெறிப்பிடித்து அலைவார்களா? இவர்கள் மூலமாக கூடஉள்ள திருமண்டலத்தின் பெருமகான்களுக்கு பிஷப்மார்களால் பெரும் ஆதாயம் உண்டு. சிஎஸ்ஐ காம்ப்ளெக்ஸ்,கடைகள்,கட்டிடங்கள் இவைகளை வாடகை விடுவதிலும், அட்வான்ஸ் தொகை வாங்குவதிலும் பெரும்தொகை நிர்வாகிகளுக்கு செல்கிறது. அட்வான்ஸ் தொகைக்கான ரசீது தொகை சரியாக இருக்கும்.

ஆனால் அந்த தொகைக்குமேல் ஒரு பெரும் தொகை இவர்களுக்கு கைமாறியதால்தான் குறிப்பிட்டவர்களுக்கு கடை வாடகைக்கு விடுகிறார்கள்.

11 மாதத்துக்கு ஒருமுறை கடைக்காரன் அதற்கான ஒப்பந்த பத்திரத்தில் ஒப்பிட்டு புதுபிக்கவேண்டும். நிறைய திருமண்டலங்களில் இதை ஒவ்வொரு வருடமும் கவனிக்காததால் கடைகளை,கட்டிடங்களை காலி செய்யாது,வாடகை ஒழுங்காக கொடுக்காமல் அதன் காரணமாக சிஎஸ்ஐ திருமண்டலத்தின் பணம் நீதிமன்ற வழக்குக்கு லட்சக்கணக்கில் செலவழித்து மக்களின் காணிக்கை பணம் வீணாகிறது.

நிர்வாகம் சரியில்லாததால் இந்த பிரச்சனை உண்டாகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு சாதகமாக பிஷப் உடன்படுவதால் பிஷப்பின் ஒய்வு வருடங்கள் நீடிப்பு இப்படிப்பட்டவர்களுக்கு வசதியாக இருக்கிறது.

‘ திருச்சி திருமண்டலத்தில் உள்ள தாராபுரம் மிஷன் காம்பவுண்டில் விறகு கடைமுதல் பல கட்டிடங்கள் ஒரே ஒருவரின் மேற்பார்வையில் பல வருடமாக கணக்கு சரிவர காட்டப்படாமல் இருப்பதாக கூறுகிறார்கள்.

மிஷனரிகள் வாங்கி கொடுத்த அந்த பிரம்மாண்ட இடம் பாழாக கிடக்கிறது.

தாராபுரம் சிஎஸ்ஐ சபை கமிட்டியில் அந்த நபருக்கு எதிராக யாரும் கேள்விகேட்க தயங்குகிறார்கள்.

இப்படிப்பட்ட அநியாயங்களுக்கு **திருச்சி பிஷப்** துணை நிற்கிறார். இந்த பிஷப் இப்போது ஒய்வுபெறபோகிறார். இவர் ஒய்வு வருடம் நீடித்தால் பணம் கொள்ளையடிப்பவர்களுக்கு கொண்டாட்டம். ஆகவே பிஷப் வயது நீடிப்பு சட்ட திருத்தத்துக்கு ஆயர்களை பயமுறுத்தியும் பணம் கொடுக்க வேண்டியவர்களுக்கு பணம் கொடுத்தும் அநேக எதிர்ப்புகளுக்கிடையே சட்டதிருத்தம் வெற்றி பெற்றதாக திருச்சியில் அறிவிக்கப்பட்டது.

திருச்சி திருமண்டலத்தில் பல ஊழல்களில் இந்த விஷயம் ஒரு துளி மட்டுமே, மற்ற ஊழல்களின் பட்டியல் நீளுகிறது என்று கூறி திருச்சி-தஞ்சாவூர் திருமண்டல ஆயர்கள் முதல் சபை மக்கள் வரை திருமண்டல ஊழல் விவகாரங்களை வெளியே கூற முடியாமல் புலம்புகிறதாக வரும் செய்தி வேதனையாளிக்கிறது.

ஒவ்வொரு **CSI** மற்றும் **லூத்தரன்** ஆகிய சபைகளின் திருமண்டலங்களிலும் பணம் கொள்ளையடிக்கும் ஊழல்வாதிகள் பெருக காரணம். தலைமை சரியில்லை.

பிஷப் ஆவிக்குரியவராக இருப்பாரேயானால் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்காதபடி துணிந்து நடவடிக்கை எடுப்பார் அல்லவா?.

‘ **அதிபதியானவன்(பிஷப்-மாடரேட்டர்)**
**பொய்களுக்கு**
**செவி கொடுத்தால்**
**அவன் (பிஷப்-மாடரேட்டர்)**
**ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்கராவார்கள்**.நீதி 29:12.

# சுப்ரீம் கோர்ட தீர்ப்பு:

## சட்டத்திருத்தம் தோற்றது:

CSI பிஷப்மார்களின் பதவி வெறிக்கு இந்திய தலைமை நீதிமன்றம் **சுப்ரீம் கோர்ட்** சட்டதிருத்த மசோதாவை நிறைவேற்றக்கூடாது என்று அறிவித்துள்ளது சரியான பாடமாகும்.

இது தூத்துக்குடி, கன்னியாகுமரி டையோசிஸ், திருநெல்வேலி டையோசிஸ், திருச்சி, சேலம்,கோட்டயம், திருவனந்தபுரம்,திருவல்லா போன்ற பல இடங்களில் உள்ள இரட்சிக்கப்பட்ட ஆயர்கள் சிலரும், சிஎஸ்ஐ சபைகளில் உள்ள முக்கியமான நபர்கள் சிலரும் சேர்ந்து இரவெல்லாம் கண்விழித்து சட்டதிருத்த மசோதாவுக்காக அவர்கள் யாவரும் ஜெபித்ததின் பலன்தான் இந்த நீதிமன்ற தீர்ப்பு. இந்த ஜெபங்களில் பங்குக்கெடுக்க இந்த குறிப்பிட்ட ஜெபத்துக்கு என்னை தலைமை வகிக்க பல இடங்களில் அழைக்கப்பட்டேன். ஆனால் 11 உலக நாடுகளில் கடந்த நாட்களில் ஊழியம் செய்ய சென்றதால் என்னால் அந்த ஜெப ஐக்கியங்களில் பங்குகொள்ள முடியவில்லை. ஆனால் எந்தெந்த நாடுகளில் ஊழியம் செய்தேனோ அங்கெல்லாம் இரவு நேரங்களில் நம் சிஎஸ்ஐயின் பிஷப்மார் ஒய்வுபெரும் வருடங்கள் நீடிக்க அனுமதிக்க வேண்டாம் என்று கர்த்தரிடம் என் சார்பில் ஜெபம் ஏறெடுத்தேன்.

நான் பிறந்து வளர்ந்து என்னை ஆளாக்கி, என்னை ஊழியக்காரனுமாக்கிய என் சிஎஸ்ஐ சபையானது என் கண்முன் இப்படி சீர்ழிவதைக்கண்டு என்னால் சகிக்கமுடியவில்லை. என் தகப்பனர் திரு.மாணிக்கம் அவர்கள் 30 வருடம் சிஎஸ்ஐ சபையின் செயலாளளராக பணியாற்றி சிஎஸ்ஐ சபையின் ஆரம்ப காலம் தொடங்கி ஊழியம் செய்தவர். ஆகவே சிஎஸ்ஐ சபையைக்குறித்த பாரம் எங்கள் குடும்ப இரத்தத்தில் உண்டு.

## சிஎஸ்ஐ- லூத்தரன் பிஷப்மார்களுக்கு ஆவியானவரின் ஆலோசனை:

உங்களிடத்திலுள்ள **தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து**
**கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும்,**
**அவலட்சனமான ஆதாயத்திற்காயல்ல**
உற்சாக மனதோடும்,
(கர்த்தா் கொடுத்த) சுதந்திரத்தை இறுமாப்பா ஆளுகிறவர்களாக அல்ல,
**மந்தைக்கு மாதிரிகளாகவும்**
கண்காணிப்பு செய்யுங்கள்
அப்படி செய்தால்
**பிரதான மேய்ப்பர்(இயேசுகிறிஸ்து) வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தை**(பிஷப்மார்-மாடரேட்டர்,ஆயர்கள்)பெருவீர்கள். 1 பேது 5:2-4.

## மாடரேட்டர் - பிஷப்மார்:

**சுப்ரீம் கோர்ட்டின் தடை உத்தரவோடு** உங்கள் வழக்குகளை நிறுத்திக்கொள்ளுங்கள். இயேசுவை ஆராதிக்காத அவிசுவாசி மூலமாக, **சுப்ரீம் கோர்ட்** உத்தரவு என்ற பெயரில் கர்த்தரின் எச்சரிப்பு வந்துவிட்டது. மறுபடியும் சுப்ரீம் கோர்ட்க்கு வேறு வழியாக வழக்கு தொடர மாடரேட்டர் முயற்சிப்பதாக கேள்விப்பட்டேன். இவருடைய முயற்சிகள் செலவுகள் யாவும் பல விதங்களில் **மாடரேட்டர்** அவர்கள் **வாங்கியதாக** கூறப்படும் **ஊழல் பணம் முழுவதையும்**

வக்கீல்கள் விழுங்கத்தான் பயன்படும். கூடவே தேவ கோபத்தையும் உங்களோடு இவ்விஷயத்துக்கு ஒத்துழைக்கும் நீங்கள் யாவரும் சந்திக்க வேண்டிவரும்.

' **நீங்கள் செய்யும் துர்கிரியைக்கு தக்க தண்டனை சீக்கரமாய் நடவாதபடியால் (பிஷப்-மாடரேட்டர்-ஆயர்கள்)**
**இருதயம் பொல்லாப்பை செய்ய அவர்களுக்குள்**
**துணிகரம் கொண்டிருக்கிறது.** பிர 8:11.

' **அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக்**
**கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான்.** நீதி 29:1.

## நன்றி:

' ஒய்வுவயது அதிகமாக்கும் சிஎஸ்ஐ சட்டதிருத்த மசோதவை தடுத்த அனைத்து பிஷப்மார்களுக்கும்,ஆயர்களுக்கும்,DC மெம்பர்களுக்கும் நன்றி.

' சட்ட மசோத நிறைவேறக்கூடாது என்பதற்காக ஆங்காங்கே ஜெபித்த எல்லா ஜெப குழுவிற்கும் நன்றி.

' சட்டதிருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது என்று மனசாட்சியில்லாமல் பொய்யாய் அறிவித்த அத்தனை பிஷப்மார்களுக்கு அவர்களை உற்சாகப்படுத்திய எல்லா நபர்களுக்கும் தேவ தண்டனை வரக்கூடாது என்று ஜெபிப்போம்.

' சட்ட மசோதா திருத்தத்தை எதிர்த்து **சுப்ரீம் கோர்ட்** சென்று முயற்சிகள் எடுத்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், வக்கீல்மார்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

' சட்ட மசோதா திருத்தத்தை எதிர்த்து வழக்காட **சுப்ரீம் கோர்ட்** தீர்ப்பை எதிர்த்து மாடரேட்டர் அவர்கள் மறுபடியும் சுப்ரீம் கோர்ட்டுக்கு வேறு சட்டவிதிகளை காண்பித்து வழக்காட முயற்சி எடுப்பதாக அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

மாடரேட்டருக்கு எதிராகவும், திருநெல்வேலி பிஷப் அவர்களுக்கு எதிராகவும் இவர்கள் சட்ட விதிகளை மதிக்காமல், சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதாக அறிவித்தது செல்லாது என்று **திருநெல்வேலி பிஷப்** அவர்களுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்கை கொண்டு செல்ல முயலும் நண்பர்களுக்காக ஜெபிப்போம்.

அப்படி செல்ல அவசியம் இல்லாதபடி மாடரேட்டரே அந்த சட்ட திருத்த மசோதாவை வாபஸ் பெறவேண்டும் என்றும் ஜெபிப்போம்.

' கடந்த மாதம் முதலேசிஎஸ்ஐயின் இப்படிப்பட்ட பிரச்சனைகளோடு மற்ற சட்ட சம்பந்தமான விஷயங்களுக்காகவும் **பொது நல வழக்கு** தொடுக்க ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கும் நபர்களுக்காக ஜெபிப்போம்.

மேலும் அவர்கள் இதற்காக நீதிமன்றம் செல்லாதபடி எல்லாம் சுமூகமாக முடிய ஜெபிப்போம்.

' சிஎஸ்ஐ பிஷப்மார்களைக்குறித்து நான் கண்டித்து எழுதியது பல பிஷப்மார்களுக்கு என் மேல் வெறுப்பு தோன்றும். சிஎஸ்ஐயில் வாசல்கள் அடைப்படும் என்று அறிவேன்.

சிஎஸ்ஐ யிலுள்ள எல்லா பிஷப்மாரும்,மாடரேட்டரும் **மோசம் என்று நான் குறிப்பிடவில்லை.**

இவர்களிலும் **தெய்வபயம் உள்ள ஒரு சில பேர் உண்டு.** அவர்களுக்காக தேவனை துதிக்கிறேன். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# வெளிநாட்டு கலாச்சாரம்

**(குறிப்பு: அக்டோபர் மாத ஜாமக்காரனில் வாலிப பிள்ளைகளுக்காக எழுதப்பட்ட என் சொந்த வாழ்க்கையின் சோதனையின் அனுபவம் பல ஊழியர்களுக்கும் பிரயோஜனப்பட்டதாக அறிந்து தேவனைத்துதிக்கிறேன். இந்த நவீன காலத்தில் குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் பிள்ளைகளுக்காக இதை எழுதுகிறேன்).**

இந்த நவீன காலத்தில் இந்தியாவிலும்,வெளிநாட்டிலும் வாழும் பிள்ளைகளுக்கு பெற்றோருடன்உள்ள பாச உறவுகள் குறைந்துவிட்டன. அதற்கு ஒரு முக்கிய காரணம் பிள்ளைகளுடன் பெற்றோரின் நெருக்கம் குறைந்து போனதாகும்.

இப்போதெல்லாம் சில வீடுகளில் பிள்ளைகளுக்கு படுக்க தனிஅறை, தனி கட்டில் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பெற்றோருடன் ஒன்றாக கட்டிலில் படுப்பதில்லை.

' அந்த காலத்தில் 1942ம் வருடம் வரை என் வீட்டில் என் அக்காமார்கள், இரவில் அம்மாவை கட்டி அணைத்து படுத்திருப்பதை கண்டிருக்கிறேன். நானும் என் வாலிப வயதில்கூட என் அம்மாவை கட்டிப்பிடித்து படுத்திருக்கிறேன். அந்த காலத்தில் வளர்ந்த பிள்ளைகள்கூட அம்மாவின் மேல் கால்துாக்கிபோட்டு படுப்பது வழக்கமாகும். அதில் அன்பும் பாசமும் பிணைந்து காணப்படும். அம்மாவின் அணைப்பில் கிடைக்கும் சூடு இருக்கிறதே அது மனோதத்துவ ரீதியாக பிள்ளைகளுக்கு தங்கள் பெற்றோர்மீது கூடுதல் பாசம் உண்டாக வழி உண்டாக்குகிறது என்று கூறப்படுகிறது.

ஆனால் இந்த காலத்தில் குறிப்பாக அமெரிக்கா,ஐரேப்பிய நாடுகளில் அம்மாவும்-மகளும் ஒன்றாக கட்டிலில் படுப்பதே இல்லை. அது கலாச்சார மாற்றத்தால் உண்டானதாகும். பிள்ளைகளுக்கு Privacy(அந்தரங்கம்) தேவை என்பது இப்போதைய மனசாஸ்திரம் கூறுகிறது. இந்த நிலையை மாற்ற இப்போது வழி உண்டு என்று மனோதத்துவ ஆலோசகர் கூறியுள்ளார். அதாவது மகள் அல்லது மகன் தனி அறையில் தனி கட்டிலில் படுத்திருந்தாலும் தாய் அவர்கள் அறைக்கு சென்று அவர்கள் கட்டிலில் ஒன்றாக படுத்து பிள்ளைகளுடன் உறவாடவேண்டும். பள்ளிக்கூடத்தில் அன்று நடந்த விஷயங்களை படுத்துக்கொண்டே கேட்கவேண்டும். அவர்கள் படிப்பைப்பற்றி விசாரிக்கவேண்டும். அவர்கள் Girl Friend, Boy friend பற்றி விசாரிக்கவேண்டும். அவர்களில் யார் யார் எப்படி பழகுகிறார்கள் என்றெல்லாம் விசாரிக்கவேண்டும். இதை பெற்றோர் செய்யாததால்தான் அவர்கள் வயதில் உள்ளவர்களோடு தங்கள் அந்தரங்க பிரச்சனைகளை தங்கள் Girl Friend, Boy friendகளுடன் பகிர்ந்துகொள்கிறார்கள். பெற்றோரிடம் பேச வேண்டிய அந்தரங்க விஷயத்தை தன் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வதால் அவர்கள் தவறான ஆலோசனைகளைக்கூறி நம் பிள்ளைகளை வழி தவற செய்து அந்த பிள்ளைகளுக்கு பெற்றோரின் தொடர்பே இல்லாமல் செய்துவிடுகிறார்கள். இங்குதான் பிரச்சனை ஆரம்பிக்கிறது.

ஒருமுறை அமெரிக்காவில் ஒரு வெள்ளைக்காரர் வீட்டில் தங்க எனக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர் நல்ல ஊழியர். அவர் மனைவியும் நல்ல ஊழியர். ஒரு நாள் நானும் அந்த அமெரிக்க தம்பதியினரும் ஆவிக்குரிய விஷயங்களை பேசிக்கொண்டிருந்தோம். அவர் மகள் ஹைஸ்கூல் படிக்கிறாள் என்று நினைக்கிறேன். அவள் நாங்கள் பேசி கொண்டிருக்கும் அறைக்கு சாரி! என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்து என் அருகில் அமர்ந்திருந்த அவரின்

தாய்யான அந்த வெள்ளைக்கார பெண்மணியின் காதருகில் சென்று ஏதோ கேள்வி கேட்டார். அதற்கு அவளின் தாய் சத்தமாக மகளிடம் கூறுகிறாள். Go and get a Boy Friend and know all these things என்றாள். உன்னுடைய ஆண் நண்பனை கண்டுபிடித்து இம்மாதிரியான கேள்விகளை கேட்டு தெரிந்துக்கொள் என்றார் அவளின் தாய். இதுதான் அமெரிக்க கலாச்சாரம்.

அவள் என்ன மாதிரி கேள்வி கேட்டிருப்பாள் என்று என்னால் யூகிக்க முடிந்தது. ஏதோ பாலுணர்வு விஷயமாக ஒரு சந்தேகத்தை தன் அம்மாவிடம் கேட்டிருக்கிறாள். ஆனால் அந்த தாயோ ஒரு ஆண் பையனை நண்பனாக்கி இப்படிப்பட்ட விஷயங்களை தெரிந்துக்கொள் என்று ஆலோசனை கூறியிருக்கிறார். இது 1974ல் நடந்த சம்பவம். ஒரு தாயிடம் **மகள்** தன் சரீரத்தைப்பற்றி தன் பாலுணர்வு பிரச்சனையைப்பற்றி மனம்விட்டு கேள்வி கேட்கிறாள். ஆனால் அந்த தாயின் பதிலை பார்த்தீர்களா? இதுதான் கலாச்சார பிரச்சனை. அந்த தாய் ஆவிக்குரிய ஊழியம் செய்யும் தாயானாலும், கலாச்சார வழமையின்படி தன் மகளை தவறு செய்யும் சூழ்நிலைக்கு தள்ளுகிறாள்.

இந்த இடத்தில்தான் நம் **இந்திய-ஆசிய** கலாச்சார பெருமை தலை உயர்த்தி பெருமையுடன் நிற்கிறது. நம் பிள்ளைகள் தங்கள் பாலுணர்வு பிரச்சனைகள் தன் சரீர காம உணர்ச்சி பிரச்சனைகளை நம்மிடம் மனம்விட்டு பேச முயன்றால் அது மிக நல்ல அடையாளம் ஆகும். அந்த சமயம் தாய் அவளிடம் அல்லது மகனிடம் வெளிப்படையாக மனம்விட்டு பேசி விளக்கம் கொடுத்தால் பிள்ளைகள் இம்மாதிரியான சரீர உணர்ச்சிகளை பகிர்ந்துக்கொள்ள நண்பர்களை தேடி போகமாட்டார்கள்.

இப்போதும் அமெரிக்கா,கனடா ஆஸ்ட்ரேலியா,லண்டன் ஆகிய இடங்களில் வாழும் இந்திய குடும்பங்களில் உள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகள், தனி அறையில் படுத்தாலும் அவர்கள் வாலிப வயதை அடைந்திருந்தாலும் அவர்களை பெற்ற தாய் காலையில் எழுந்து பிள்ளைகளின் படுக்கைக்கு சென்று, பிள்ளைகள்படுக்கையில் படுத்துஇருக்கும்போதே அவர்களை முத்தமிட்டு அவர்களின் தலையை தடவிகொடுத்து அவர்களை தன் மார்போடு (ஹக்)அணைத்து பெற்றோர் அன்போடு அவர்களிடம் பழக்கினால் அவர்கள் அன்பைத்தேடி Boy friend, Girl friend தேடி போகமாட்டார்கள்.

அமெரிக்காவில் நான் தங்கின இந்திய குடும்பத்தினரின் வீட்டில் இதை நேரில் கண்டேன். அவர்களின் பிள்ளைகள் தனி அறையில்தான் படுக்கிறார்கள். இரவு படுக்கைக்கு போகும்போதும் காலையில் கல்லூரிக்கு அல்லது வேலைக்கு செல்லும்போதும் அம்மாவை பிள்ளைகள் அணைத்து முத்தமிட்டு அப்பாவை அணைத்து முத்தமிட்டு செல்வதை கண்டேன். மாலை அவர்கள் வீட்டுக்கு திரும்பினவுடன் நானும் அவர்களின் பிள்ளைகளும் இரவு ஒன்றாக அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது வேலைக்கு போகும் வளர்ந்த மகள் சோபாவில் அமர்ந்திருக்கும் அப்பா மடியில் தலைவைத்து படுத்து அவரோடு கொஞ்சியதை கண்டேன். அந்த காட்சியை நான் மிகவும் சந்தோஷத்தோடு ரசித்தேன். இந்த காலத்திலும் இந்த மோசமான ஐரேப்பிய கலாச்சாரத்திலும் ஒரு சில பெற்றோர் அவர்களின் பிள்ளைகள் உறவு மிக நன்றாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட குடும்பத்தின் பிள்ளைகள் பாவ கலாச்சாரத்தில் அவர்களுக்கு போக மனம் வராது.

ஆகவே ஐரோப்பிய நாடுகளில் வாழுகிறவர்களானாலும், இந்தியாவில் வாழுகிறவர் களானாலும், நவீன கலாச்சாரத்தில் நம்பிள்ளைகள் வளர்ந்தாலும் பெற்றோர்கள் அந்த பிள்ளைகளுடன் எல்லா விஷயத்திலும் சரீர சம்பந்தமான விஷயத்திலும் வெளிப்படையான

சம்பாஷைனைகளும், உறவுகளும் அவர்களோடு வைத்துக்கொண்டால், அப்படிப்பட்ட பிள்ளைகள் கலாச்சார பாவத்தில் விழமாட்டார்கள்.

‘ 8 வயது பையன் குளிய அறையில் இருந்து அம்மாவை சத்தமிட்டு அழைத்தான். அவன் தன் சரீர உறுப்பில் ஏற்பட்ட உணர்ச்சியின் மாற்றத்தை தன் தாயிடம் வெட்கப்படாமல் கூற, உடனே அந்த தாய் கொஞ்சம் பொறு நான் ஐஸ் கட்டிகளை எடுத்து வருகிறேன். எல்லாம் சரியாகிவிடும் என்று கூறி ஐஸ் கட்டிகளை கொடுத்து உதவியிருக்கிறாள்.

இப்படிப்பட்ட மனம் திறந்த உறவுகள் தாய்க்கும், மகனுக்கும், மகளுக்கும் உள்ளவரை பிள்ளைகள் நம் கையைவிட்டு நம் அன்பைவிட்டு வழிவிலகி போகமாட்டார்கள்.

ஐரோப்ப நாடுகளில் வாழும் பெற்றோர்களுக்கும் இந்தியாவில் அதே பிள்ளைகளின் பிரச்சனைகளை சந்திக்கும் பெற்றோருக்கும் இவைகளை ஆலோசனைகளாக எழுதினேன். ஜெபத்தோடு நம் பிள்ளைகளை வளர்ப்போம்.

ஆவியானவர் நமக்கு ஆலோசனை தந்து உதவுவார். ஜெபிப்போம்.

## விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள்.

அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

# முழுநேரக் கிறிஸ்தவப் பணிக்கு அழைப்பு கட்டாயம் தேவையா?

(BYM - R.Stanley)

திட்டவட்டமாய் "அழைக்கப்பட்டலொழிய" ஒருவரும் முழுநேரக் கிறிஸ்தவப் பணிக்குள் நுழையக்கூடாதென்பது பெருவாரியான கிறிஸ்தவர்களின் கருத்து. மற்றவர்களோ அது ஒவ்வொருவருடைய "தெரிந்தெடுப்பை" பொறுத்தது எனக் கருதுகின்றனர். இதைக்குறித்த குழப்பமே அறுவடைப்பணியில் போதுமான ஊழியர் இறங்காததற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகும். இதைக்குறித்து திருமறை கூறுவதென்ன?

தெளிவான அழைப்பை வலியுறுத்த அடிக்கடி பயன்படுத்தப்படும் திருவசனம் எபி 5:4" **ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய** ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்திற்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" இங்கு இரு முக்கிய காரியங்களை நாம் கவனிக்கக் தவறக்கூடாது. முதலாவது இங்கு சொல்லப்படுவது பொதுவான ஆசாரியத்துவப் பணியைப் பற்றியல்ல,"**பிரதான ஆசாரியனாய்**"சிறப்பான பொறுப்பிற்கு **நியமிக்கப்படுவதைக்** குறிக்கிறது(வச 1), இரண்டாவது புதிய உடன்படிக்கையில் ஆசாரியத்துவம் மாற்றப்பட்டுவிட்டது. நமது அண்ணன் இயேசு ஆரோனின் வரிசையிலல்ல. மெல்கிசெதேக்கின் வரிசையில் வந்துள்ளார்(எபி 7:11-13). அவர் யூதா கோத்திரத்தில் தோன்றினார். அந்தக் கோத்திரத்தைக் குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை(வச 14). எனவே ஊழிய அழைப்புக்கான கேள்விக்கு பதிலளிக்க எபி 5:4ஐ மேற்கோள் காட்டுவது பொருத்தமல்ல.

மோசே அல்லது **பவுலைப்போல** விவரிக்கக்கூடிய வகையில் அழைக்கப்பட வேண்டுமென்று நீங்கள் காத்திருந்தால் ஏமார்ந்துபோவீர்கள். இவர்களைப் போன்றோர் யூதச் சமுதாயத்திற்கும் கிறிஸ்தவ சபைக்கும் அடித்தளமிடும் காலங்களில் முக்கிய பங்கு வகிக்க அழைக்கப்பட்டவர்கள். சபை சரித்திரத்தில் இன்றைய நாள் "பதினோராம் மணி"வேளையாகும். ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்று சாக்குச் சொல்லி நிற்போரை பார்த்து நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன? என அறுப்பின் ஆண்டவர் கடிந்துகொள்வார்(மத் 20:1-7). அழைப்பு வருமென்று காத்துக்கொண்டு அவர்கள் கடைத்தெருவில் நின்றுக் கொண்டிருந்திருக்கக்கூடாது. மாறாக, அவர்கள் திராட்சத் தோட்டத்திற்குச் சென்று வேலைக்கு தாங்கள் தேவைப்படுகிறோமாவெனக் கேட்டிருக்கவேண்டும். உலக வேலைகளைத் தேடும்போது ஒருபடி தவறாது பல கம்பெனிகளில் ஏறியிறங்கி, எந்த கம்பெனி வாசல் திறக்கிறதோ அதைக் கர்த்தரின் சித்தமென எடுத்துக்கொள்ளுகிறோமல்லவா? அதே தத்துவத்தைக் கர்த்தரின் பணியில் இறங்கவும் பயன்படுத்தவேண்டும்.

கிறிஸ்தவர்களில் பலர் வேலையில்லாமல் அல்லது தங்கள் படிப்பிற்கும் பயிற்சிக்கும் தகுதியற்ற குறைந்த வேலையில் இருக்கிறார்கள். ஆனாலும் போதுமான வேலையாட்களில்லாத இறையரசுப் பணியைக்குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை(மத் 9:37).

**"ஆண்டவரே, என்னை அழையும்"** என்று ஜெபிக்காதீர்கள். **"என்னை அனுப்பும்"** என்று ஜெபியுங்கள்(மத் 9:38). ஏசாயாவைப் பார்த்து ஆண்டவர் "உன்னை நான் அனுப்பட்டுமா? நீ நமது காரியமாய் போவாயா? என்று கேட்கவில்லை. மாறாக அவர் "யாரை நான் அனுப்புவேன்?

யார் நமது காரியமாய் போவான்?என்றார் (ஏசா 6:8) பொதுவான அந்த அழைப்பிற்கு ஏசாயா தனிப்பட்ட பதில் கொடுத்து முன்வந்தான். **"இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும்".** அதற்குப் பின்னர்தான் ஆண்டவர் அவனைப் பார்த்து "நீ போ" என்றார்(வச 9) நாம் ஊழியத்திற்கு போக தன்னார்வமாய் முன்வரும்போதுதான் ஆண்டவர் நம்மை அனுப்புவார்.

அழைக்கப்பட்டோர் **அநேகர்.** தெரிந்துக்கொள்ளப்பட்டோரோ சிலர். "சுவிசேஷத்தில் இருமுறை இவ்வாசகத்தை இயேசு மொழிந்தார். ஒன்று திராட்சைத்தோட்ட உவமையில், அடுத்தது கல்யாண விருந்து உவமையில்(மத் 20:16,22:14). இவ்விரு உவமைகளும் தேவ அழைப்பிற்கு சரியாய் பதில் கொடுக்க வேண்டிய மனிதனின் பொறுப்பை வலியுறுத்துகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால், **"அழைப்பிற்குக் கீழ்ப்படிவோரே** தெரிந்துக் கொள்ளப்பட்ட வர்களாம்". தங்கள் பிள்ளைகளை ஆண்டவரின் திருப்பணிக்கு அர்ப்பணிக்கும் பெற்றோரின் விருப்பங்களையும் அவர் கனம் பண்ணுகிறார். தனக்கொரு மகனைக் கர்த்தர் கொடுப்பாரானால் அவனை அவரது பணிக்கே கொடுத்து விடுவதாக அன்னாள் தானாகவே வாக்குக் கொடுத்தாள். அவளது இதய வாஞ்சையைக் கர்த்தர் அருளிச் செய்தார். அவள் தனது வாக்கைக் காப்பாற்றினாள். அதற்குப் பல ஆண்டுகள் கழித்துதான் கர்த்தர் நேரடியாய் சாமுவேலை அழைத்தார்(1 சாமு 1:11,27,28, 3:8,9) மிகச்சிறிய வயதிலிருந்தெ இந்நாட்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை டாக்டராக, எஞ்சினியராக வேண்டுமென்று ஊக்குவித்து அப்படியே ஆக்கிவிட தேவையான ஏற்பாடுகள் அத்தனையையும் செய்யும்போது அதே விதமாய்க் கர்த்தரின் பணிக்கும் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தாதது ஏனோ?

நான் முழுநேரப் பணிக்குள் இறங்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தனது முதற்பேரான என்னை எனது அம்மா ஆண்டவரின் பணிக்கு ஒப்புக்கொடுத்து விட்டார்கள். நான் பொறியியல் துறையில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தாலும் எனது தருணம், தாலந்து, தனம் அத்தனையையும் **மிஷனரிப் பணியில்** வார்த்துவிட வேண்டுமென்ற வாஞ்சை எனக்குள் வளர்ந்துக்கொண்டேயிருந்தது. இவ்வித **"விருப்பத்தை"** எனக்குள் உண்டாக்கியவர் தேவனே என நான் புரிந்துக்கொண்டேன்(பிலி 2:13). நான் சத்தம் ஒன்றும் கேட்கவில்லை, **தரிசனம்** ஒன்றும் காணவில்லை. எனக்குக் கிடைத்தது எளிமையான **வழிநடத்துதல்** மட்டுமே, எனது தீர்மானத்தை என் மனைவியோடு பகிர்ந்துக்கொண்டபோது அவள் மனமகிழ்ந்தாள். என் அம்மா கண்ணீரோடு என்னை அணைத்துக்கொண்டார்கள். கர்த்தர் சித்தம் ஆகட்டும் என்றனர். எனது மாமனார், மாமியார், கணவன் முழுநேரப் பணிக்குள் காலெடுத்து வைக்கையில் **மனைவியும் அவனோடு** செல்வதே பொதுவான சூழலில் விரும்பத்தக்கது. ஆபிரகாமின் அழைப்பே சாராளுக்கும் போதும்(ஆதி 12:5). நான் அழைக்காதிருக்க நீ ஏன் வந்தாய்? என்று கடவுள் யாரையும் கேட்டதாய் நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை. மாறாக, நான் அழைத்தபோது நீ ஏன் வரவில்லை? என்று ஆண்டவர் வினவக்கூடிய கிறிஸ்தவர்கள்தான் ஏராளம்!. ஏராளம்!. கீழ்ப்படியாதவரே கீழ்ப்படிகிறவர்களைவிட அதிகம். எல்லோரிடமும் ஆலோசனை கேட்டுக் கொண்டிருப்பதுரும் நல்லதல்ல. சிலவேளைகளில் மூத்தவர்களும் தீர்க்கதரிசிகளுங்கூட உங்களை வழி பிசகக் செய்யமுடியும்.(1இராஜ 14:,கலா 1:16). என்னைத் தவறாய் புரிந்துக் கொள்ளவேண்டாம். தமது பிள்ளைகள் யாவரும் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு முழுநேர ஊழியத்திற்கு வந்துவிட தேவன் எதிர்ப்பார்க்கிறாரென்று நான் சொல்லவில்லை. நான் சொல்வது என்னவென்றால், **தேவை மிகுதி, காலம் கொஞ்சம், தெரிந்தெடுப்பு** உங்களுடையது. முதல்அடி எடுத்து வையுங்கள். புறப்படுங்கள். நீங்கள் இடதுபுறம் அல்லது வலதுபுறம் சாய்ந்தால், கடவுள் பின்னலிருந்து சத்தம்கொடுத்து உங்களை நேர்வழியில் நடத்துவார்(ஏசா 30:21). ❖❖

# ஊழியர்கள் மற்றும் உண்மை சபை விசுவாசிகள் பிச்சைக்காரர்கள் அல்ல

Selected

அநேக ஆண்டுகளுக்கு முன் ஒரு ஏழை அங்கத்தினர்கள் உள்ள ஒரு சபையும் அந்த சபையின் பாஸ்டரும் எனக்குத்தெரியும். பசி,பட்டினியாய் இருக்கும்போது அவரும், அவர் சபையின் உடன் ஊழியர்களும் பப்பாளிக்காயை வேகவைத்து உப்பையும், ஊறுகாயையும் வைத்து சாப்பிடுவதுண்டு. அந்த சபையில் சபை மக்கள் இடும் காணிக்கை மிகவும் சொற்பமாயிருக்கும். ஞாயிறு ஆராதனையில் மட்டும் ஆராதனை முடிந்தவுடன் சபை மக்கள் அனைவருக்கும் சாதமும், சாம்பாரும் குறைந்த அளவு கொடுப்பார். அது அளவு சாப்பாடுபோல கொஞ்சமாக இருக்கும். ஆனாலும் அந்த வறுமை நிலையிலும் அந்த சபை மக்கள் மிகவும் சந்தோஷத்தோடும், நன்றியுடன் ஆண்டவரை துதித்து பாடி மகிழ்ந்து இருப்பர்கள். தங்கள் வறுமையை பாஸ்டர் சபை மக்களிடமோ, வெளிநபர்களிடமோ யாரிடமும் கூறமாட்டார்.

அதே ஊரில் ஒரு கிறிஸ்தவர். மிகப்பெரிய பணக்காரர் இருந்தார். தன் அவர் மகள் திருமணத்தை மிகவும் ஆடம்பரமாக நடத்தினார். ஏராளமானவர்களை அந்த திருமணத்துக்கு அவர் அழைத்திருந்தார். ஆனால் எதிர்ப்பார்த்த ஆள்கூட்டம் வரவில்லை. அதனால் ஆயத்தப்படுத்தின பிரியாணி ஏராளமாக மீதியாகிவிட்டது. அத்தனையும் கீழே கொட்ட அவருக்கு மனம் வரவில்லை. அப்போது மேலே குறிப்பிட்ட அந்த ஏழை பாஸ்டர்,ஊழியர்கள்,சபையின் ஏழை மக்கள் இவர்களின் ஞாபகம் வரவே உடனே மீதியான அத்தனை பிரியாணியையும் மிந்துப்போன மற்ற ஆகாரங்களையும் ஒரு பெரிய அண்டாபோன்ற பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு இரவு 10மணிக்குமேல் அந்த செல்வந்தரே வேகமாக அந்த சபைக்கு நேரில் வந்து பிரியாணியை பாஸ்டர்முன் வைத்து விவரத்தை கூறினார். பாஸ்டர் அவரிடம் இந்த நடு இரவில்கூட எங்களை நினைத்து இந்த பிரியாணியை நீங்களே நேரில் எடுத்து வந்ததற்கு நன்றி. ஆனால் உங்களிடம் அன்போடு ஒன்றை கேட்கிறேன். நீங்கள் கல்யாணத்திற்கு சமைத்த ஆகாரத்தில் **முதல் பங்கை கர்த்தருக்கு** என்று எடுத்து வைத்து அதை எங்களுக்கு கொடுக்க வந்தீர்களா? அல்லது கடைசி நேரத்தில் எல்லாரும் சாப்பிட்டு மிச்சம் மீதியை எடுத்துக்கொண்டு இந்த ஏழை ஊழியருக்கும், ஏழை சபை மக்களுக்கும் கொடுக்க எடுத்து வந்தீர்களா? என்று கேட்டார். அந்த செல்வந்தருக்கும் பதில் கூற மிகவும் சங்கடமாக இருந்தது. எதிர்ப்பார்த்த கூட்டம் வராததால் மிச்ச மீதியைத்தான் எடுத்துக்கொண்டு வந்தேன் என்று உண்மையை கூறிவிட்டார். உடனே அந்த பாஸ்டர் மிச்ச மீதியானதை ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் கொடுங்கள். **எப்பொழுதும் முதல் பங்கை கர்த்தருக்கு கொடுக்கும்**வகையில் ஊழியர்களுக்கும் ஏழை சபை மக்களுக்கும் கொடுங்கள். அப்போதுதான் அது உங்களுக்கு ஆசீர்வாதமாக அமையும் என்று கூறி **அந்த உணவை வாங்க மறுத்துவிட்டார்.**


மேலே வாசித்த சம்பவம் நல்ல ஒரு சாட்சியாகும். இந்த சம்பவம் என்னை பிடிக்காத வராகும் ஜாமக்காரன் அழிக்கப்படவேண்டும் என்று திருப்பத்துார் உபவாசக் கூட்டத்தில் ஜெபம் ஏறெடுத்தவர்களில் ஒருவரான மிக முக்கியமானவரின் பத்திரிக்கையிலிருந்து எடுத்தாளப்பட்ட தாகும். ஆனால் இந்த செய்தி மிக நல்ல செய்தியாய் இருப்பதால் என் வாசகர்களுக்கு பிரயோஜ னப்படவேண்டும் என்பதற்காக அவர் அனுமதி பெறாமல் இதை மட்டும் வெளியிடுகிறேன்.

ஊழியர்களை பிச்சைக்காரர்களாக நினைக்கும் இந்த காலகட்டத்தில் இந்த செய்தியை வாசகர்கள் வாசிப்பது நல்லது என்று உணர்ந்ததால் இதை வெளியிட்டேன். மேலும் சில ஊழியர்களும் பிச்சைக்காரர்களைபோல் ஜெபிக்கவந்தேன் என்ற பெயரில் வீடுவீடாய் ஏறியிறங்குபவர்கள் உண்டு. இப்படிப்பட்ட சுதந்திர ஊழியர் என்ற பெயரில் கிறிஸ்தவ வீடுகளை தேடி சுற்றுவதை நிறுத்தவேண்டும். ஏதாவது ஒரு சபையில் ஊழியராகவோ, அல்லது ஊழியர்களுக்கு உதவியாளராகவோ ஊழியம் செய்யவேண்டும். அப்படிஅல்ல என்றால் ஒரு ஊழிய ஸ்தாபனத்திலோ, மிஷனரி ஸ்தாபனத்திலோ இணைந்து செயல்படவேண்டும். சுதந்திர ஊழியர் என்று வேதத்தில் இல்லை. உண்மையுள்ள ஊழியர்களும் தங்கள் தேவைக்கு கர்த்தரைமட்டும் நம்புகிறவர்களாக இருக்கவேண்டும். தினசரி **மணியாடர்களை** எதிர்ப்பார்த்தோ? வெளிநாட்டு உதவி ஸ்தாபனங்களை **எதிர்ப்பார்த்தோ** ஊழியம் செய்யக்கூடாது.

மேலே குறிப்பிட்ட சம்பவத்தில் அந்த ஏழை பாஸ்டர் வறுமையிலிருந்தாலும் சிங்கத்தைப்போல் மிகவும் கௌரவம் உள்ளவராக பசியிருந்தபோதும் மற்றவர்கள் சாப்பிட்டதின் மிச்சம் மீதியை சாப்பிட மனம்இல்லாத **கௌரவமுள்ள பாஸ்டராக** என் மனதில் உணர்த்தப்பட்டதால் மற்ற ஊழியர்களுக்கு முன்மாதிரியாக இந்த சம்பவம் அமையட்டும் என்று இதை வெளியிட்டேன். என் உடுப்புகளை என் உடம்புஅளவுக்கு பொருந்தாத பழைய உடைகளை ஏழைகளுக்கு கொடுப்பேன். ஆனால் **ஏழை ஊழியர்களுக்கு** கண்டிப்பாக கொடுக்கமாட்டேன். புதிய துணியாக புதிய உடுப்பாக அல்லது புதிய உடைகளை வாங்க தேவையான பணமாக அவர்களுக்கு கொடுப்பேன். சில ஏழை ஊழியர்கள் உங்கள் பழைய உடுப்புகள் ஏதாவது இருந்தால் கொடுங்கள் என்று **வாய்திறந்து என்னை கேட்டுவிட்டால் நான் மிகவும் நொந்துபோவேன்.** நீங்கள் உண்மையான ஊழியராக இருந்தால் முதலில் கர்த்தரிடம் உங்கள் தேவைகளை கூறுங்கள். **வேலைக்காரி** அல்லது **வேலைக்காரன்** எஜமான் ஏதாவது போடமாட்டானா என்று எதிர்ப்பார்ப்பதுபோல் நம் தேவைகளுக்கு கர்த்தரிடமே நாம் எதிர்பார்க்கவேண்டும். கர்த்தரும் மனிதர் மூலமாகவே அந்த உதவியை அவர்களுக்கு செய்வார்.

கர்த்தருடைய ஊழியர்களுக்கென்று **ஒரு கௌரவம்** உண்டு. மேலும் கர்த்தரை உண்மையாய் புரிந்துக்கொண்டவர்கள் தங்கள் ஏழ்மையைக்குறித்து முறுமுறுக்கமாட்டார்கள். நாம் வேண்டிக்கொள்வதற்கு முன்னமே நமக்கு இன்னது தேவை என்று நம் கர்த்தர் அறிந்திருக்கிறார்.

**உள்ளதுபோதும் என்று இருங்கள். நான் உங்களை ஒரு நாளும் கைவிடமாட்டேன்.** எபி 13:5. நாம் **கர்த்தருக்கு உண்மையாக இருந்தால்- கர்த்தரும் நம்மிடம் உண்மையாக இருப்பார்.** ஊழியர்களான நம்மையும், நம் பிள்ளைகளையும்கூட கர்த்தர் யாரை கொண்டாகிலும் எப்படியாவது போஷிப்பார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஒரு நன்மையும் குறைபடாது என்று சங்கீதக்காரன் கூறுகிறான். ஒருவேளை குறைவுகளை, வறுமையை கர்த்தர் நமக்கு அனுமதித்தாரனால் அதில் ஒரு இன்பம் இருக்கும். அடுத்தவேளைக்கு நான் என் பிள்ளைகளுக்கு என்ன செய்வேன் ஆண்டவரே, என்று ஜெபிக்கும் அந்த ஜெபத்தில் கிடைக்கும் ஜெப இன்பம் செழிப்பும்,பணமும் நிரம்பி வழியும் நிலையும் நமக்கு உண்டானால் அதன்பின் கர்த்தரிடம் நாம் கேட்க நமக்கு ஒன்றுமில்லை. அந்த நல்ல சூழ்நிலையில் நாம் மனமார தேவனை துதிப்போம். அந்த சம்பரமான சூழ்நிலையின் ஜெபம் முந்தின ஜெப இன்பத்தோடு ஒப்பிடவே முடியாது. தாழ்ந்திருக்கவும் சம்பூர்ணப்படவும்,பட்டினியாயிருக்கவும் கர்த்தர் நமக்குள் இருந்து நம்மை பயிற்சிவிப்பார். பிலி 4:9,10.கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. ❖❖❖❖❖❖❖❖❖



# ஆளுகை செய்யும் தேவன் நமக்கு சவாலிடுகிறார்

**Selected**

வெற்றிபெற வேண்டும் என்ற ஆவல் மனிதருக்கு இருப்பதால் அவர்கள் எதிர்த்து வரும் சவால்களை மேற்க்கொள்ள வல்லவர்களாயிருக்கின்றனர். ஆனால் வேறு வகையானதொரு சவாலை விசுவாசிகளாகிய நாம் சந்திக்க தேவன் விரும்புகிறார். இது நம் தலைமுறையினருக்கு நம் பொறுப்பைக் கண்டுக்கொள்வது ஸ்தாபகரான அருட்திரு.முனைவர்.தியோடர் வில்லியம்ஸ் இந்த சவால்களைக் கீழ்வரும் வசனத்தின்மூலம் பட்டியிலிடுகிறார். "உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால்...(லூாக் 19:42).

இந்த நவீன யுகத்தைக்குறித்து பல காரியங்கள் கூறப்படுகிறது. வழக்கம்போல சிலர் எதிலும் **நலம்** காண்கிறவர்களாகவும், சிலர் **சந்தர்ப்பவாதிகளாகவும், சிலர் சந்தேகம் நிறைந்தவர்களாகவும்**, இன்னும் சிலர் தங்கள் வன்முறைகளால் தாங்கள் நினைக்கும் கற்பனை உலகத்தை உருவாக்க முயல்பவர்களாகவும் உள்ளனர். ஆனால் ஆளுகை நம் செய்யும் தேவன் எல்லா தலைமுறைகளிலும் தமது செயல்திட்டத்தை அதன்அதன் காலத்தில் நிறைவேற்றுவதை யாராலும் தடம் புரளச் செய்யமுடியாது.

தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேல் தன் பொறுப்பை நிறைவேற்ற தேவன் அவ்வப்போது அதை அழைக்கிறார். தெரிந்துக்கொள்ளப்பட்ட அந்த மக்கள் கடிந்து கொள்ளுதலின் பின்பும் கர்த்தருடைய காரியங்களில் கருத்து செலுத்துவதாக இல்லை. ஆகையால் கர்த்தர் மிகுந்த வேதனையோடு எருசலேமைப் பார்த்து கண்ணீர் சிந்தி, "உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால்..... " லூாக் 19:42 என கூறுகிறார். எருசலேமின் பிரச்சனை என்னவென்றால். அதற்கு கிடைத்த நாளை.. அதற்குக் கிடைத்த தருணத்தை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை பயன்படுத்தக் கொள்ளவில்லை.

**நமக்கு இது தீவிரமாய் அர்ப்பணிக்கும் நாள்:** கிறிஸ்துவின் சீடர்களாகிய நமக்கு இது ஒரு வாஞ்சை மிகுந்த அர்ப்பணிப்பின் நாள். நான் ஏன் "**வாஞ்சை மிகுந்த அர்ப்பணிப்பு** என்று கூறுகிறேன் என்றால் அர்ப்பணிப்புகளுக்கு மேல் அர்ப்பணிப்பு அனேகம் உள்ளன. கிறிஸ்தவ ஐக்கியங்களில் மகிழ்ந்து, **பல்லவிகள் பாடி நம்மையே மகிழ்வித்து** அதனோடு நின்று விடுகிற ஒருவித அர்ப்பணிப்பு இதைப்பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நம்முடையது இரத்த சாட்சிகளின் விசுவாசம் ஆகும். அதன் அடையாளம் சிலுவை. அதன் நினைவு சின்னங்கள் **அடிநில கல்லறைகள்.** ஆகவே நாம் இதை **சொகுசு மதமாகவோ,** கைநழுவும் மக்களின் வசதியான அடைக்கலமாகவோ மாற்றிவிட வேண்டாம். கிறிஸ்துவுக்கு தேவையானவர்கள் சிலுவை வீரர்கள்- சாக்லட் வீரர்கள் அல்ல? அனேக நேரங்களில் நம் அர்ப்பணிப்பும், சீஷத்துவமும் கிரயம் செலுத்த தேவையில்லாதவர்களாக இருக்கின்றன. 1 நாளா 2:24ல் தாவீது "நான் உன்னுடையதை **இலவசமாய் வாங்கி**, கர்த்தருக்கு சர்வாங்க தகனத்தைப் பலியிடாமல்...." என்று கூறுகிறார். **உறுதியான அர்ப்பணிப்பு விலையுள்ளது. அதன் கிரயத்தை கணக்குப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.** நம் **ஜெப வாழ்க்கை,** கொடுத்தல்,

கிறிஸ்துவுக்கு சரணடைதல் ஆகியவை நமக்கு **கிரயம்** செலுத்த வேண்டியதாய் இருந்திருக்கிறதா? நாம் ஜெபித்திலிருந்து,நோவை **அனுபவிப்பது** வரைக்கும் கர்த்தருக்குக் கொடுக்கிறோமா? அவர் எங்கே அழைக்கிறாரோ அங்கு விசுவாசத்துடன் செல்ல தைரியம் கொள்ளுகிறோமா? **நாம் கீழ்ப்படிந்தால்** அவருடைய மகிமைக்கென தருணங்களை கர்த்தர் நமக்கு கொடுப்பார்.

**நமக்கு இது சவாலின் நாள்:** உலகிலேயே பெரிய ஊழிய பணிக்களமாக இன்னும் இந்தியா உள்ளது. பலவிதமான சவால் விடும் தேவைகள் மத்தியில் நாம் வாழ்கிறோம். இந்த தேசத்தின் மிக அதிகமான மக்கள் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். சிலர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை ஒருமுறைகூட கேள்விப்படாதவர்கள். ஒரு அருங்காட்சியத்தில் சில கிராமவாசிகள் மரத்தில் செதுக்கப்பட்ட ஒரு உருவத்தைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். ஒருவர், "இது யார்?" என்றும், மற்றொருவர் "இது ஒரு கடவுளா?" எனவும் மூன்றாமவர், "ஏன் இவர் இவ்விதம் தொங்கிக் கொண்டிருக்கிறார்?" எனவும் வினவினர். அவர்கள் யாவரும் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவின் உருவத்தைத்தான் அப்படிப்பட்ட பார்த்துகொண்டிருந்தனர். என்ன கண்டனம்? என்ன சவால்? இயேசு 2015 ஆண்டுகளுக்கு முன்னால் மரித்து உயிர்த்து இன்றும் வாழ்கிறார். ஆனால் என் நாட்டிலும் உன் நாட்டிலும் மக்கள் இவர் யார்? என அறியாமல் ஏன் மரித்தார்? என்று அறியாமல் இருக்கின்றனர். இது சவால்தானே? மத் 24:14ல் நம் ஆண்டவர் தெளிவாக **ராஜ்யத்தின் நற்செய்தி உலக முழுவதிற்கும் சாட்சியாக எல்லா ஜனங்களுக்கும் பிரசங்கிக்கப்படும். பின்பு முடிவு வரும்** என கூறியுள்ளார். தனிமனிதனாகவும், கூட்டாகவும் நற்செய்தியை அறிவிப்பதில் நாம் ஈடுபடாவிட்டால் ஆண்டவரின் வருகையை எவ்விதம் துரிதப்படுத்த முடியும்? இது உண்மையாகவே ஒரு பெரிய சவால்?.

**நமக்கு இது ஒரு செயல்புரியம் நாள்:** எவ்வித செயல்? மூடி வேதாகம சங்கத்தை சார்ந்த வில்லியம் ஹீட்டன்."ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் போர் வீரர்களாயிருந்தனர். இப்போதே சுற்றுலா பயணிகள். ஒரு காலத்தில் **சிலுவை வீரர்கள்.** இப்போது அவர்கள் **மதிப்புள்ள நிலச்சுவான்கள்** என்கிறார். எவ்வளவு உண்மை?. ஒவ்வொரு மிஷனரி ஊழியமும் "உலகமெங்கும்" சென்று படங்கள் எடுத்து ஒவ்வொரு மனிதருக்கும் கடிதம் எழுதுபவர்களாக குறைந்துவிட்டனர். இறுதி கட்டளையின் விபரீதமான நடைமுறை?. இது சபையின் முக்கிய பகுதி சமூக நற்செய்தியைப் பரப்புவதில் கவனம் செலுத்தும் போது, உலகத்தின் எல்லைகள் வரைக்கும் இரட்சிப்பின்செய்தி பறை சாற்றும் அறைகூவல் வருகிறது. **சமூகத்திற்கும், மக்களுக்கும் அன்பு கூர்ந்து சேவை செய்யும் பொறுப்பை விட்டுவிடாமல், அதே நேரத்தில் நம் முக்கிய வேலை, எல்லா மனித வேதனைகளுக்கும் பதிலாகிய நற்செய்தியைப் பிரசங்கிப்பதே என்பதை நாம் உறுதி செய்யணேடும்.** ஆகவே தான் பவுல் ரோமர் 1:16ல் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்: முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாதவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" என்றார்.

**நமக்கு இது தருணத்தின் நாள்:** எதிர்ப்புகளும், தடைகளும் கூடிக்கொண்டிருந்தாலும் நற்செய்தி அறிவிக்க தருணங்கள் இன்னும் உள்ளன. மிஷனரி சரித்திரத்தில் உபத்திரவத்தின் காலங்கள் தான் அதிக தருணங்கள் உள்ள நாட்களாகவும் இருந்திருக்கிறது. இவ்வித தருணங்களில் நற்செய்திப்பணிகள் முடக்கப்படுவது வேதனைக்குரியது. தேவை பின்வாங்குவதல்ல, புத்தியோடு செயல்படுவதே **கட்டமைப்புகள் கைவிடலாம், பொறுப்பான**

**பதவிகள் கைமாறலாம், நற்செய்தியை அறிவிக்கும் பொறுப்பை நழுவவிடவோ செய்வதற்கு இது நேரமல்ல.** "காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான், மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான் என பிரசங்கி 11:4ல் கூறுகிறது. ஆதித்திருச்சபை கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய **காற்றையோ, காலநிலையையோ நோக்கவில்லை.**

**ஆகவே இது ஒரு ஈடுபடும் நாள்:** ஈடுபடுதல் என்றால் என்ன? சார்லஸ் பேட்ஸ் ஒருமுறை டாக்டர்.**கூப்பர்** என்ற ஒரு மிஷனரிக்கு "ஊழியத்தில் 5000 டாலர்கள் உபயோகிக்கமுடியுமா?" என கடிதம் எழுதினார். தொடர்ந்து அனேக பொருள்களையும் அனுப்பி தன் பெயர் வெளிவரக்கூடாது என கூறினார்.

திரு.பேட்ஸ் அவர்களின் மரணத்திற்குப்பின் டாக்டர்.கூப்பர் இறுதி வரைக்கும் அவரே எழுதிய நாட்குறிப்பேட்டைப் பார்த்தார். பணித்தளங்களிலிருந்து அவர் பெற்றுக்கொண்ட பெயர்களின் நீண்ட பட்டியல்கள் இருந்தது. ஒருமுறையோ பலமுறைகளோ ஜெபித்தவர்களின் பட்டியல்கள் அது. அதில் 27,994 சீனர்களும், 16,170 ஆப்பிரிக்கரும், 9,533 இந்தியர்களும், 6000 ஜப்பானியர்களும் இருந்தனர். அவருடைய காணிக்கை 26,000 டாலர்கள் அவர் விட்டுச்சென்ற பணத்தில் ஒரு நல்ல கார் கூட வாங்கமுடியாது. **இதுதான் ஈடுபாடு.** மிஷனரி அழைப்பு எல்லாருக்கும் வருவதல்ல. ஆனால் **மிஷனரி ஈடுபாடு** எல்லா விசுவாசிகளுக்கும் இருக்க வேண்டும்.

**"பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன் அதற்கு நான் இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்றேன்"(ஏசா 6:8) கர்த்தரின் சத்தம் இப்போதும் ஈடுபட அழைக்கிறது நாம் "இதோ அடியேன்...." என்று பதிலளிப்போமா?**

கர்த்தரின் ஆளுகை ஒவ்வொரு தலைமுறையினரையும் எல்லா மொழி பேசுகிறவர்களையும் அடக்கும்(வெளி 7:9). உலகம் உச்சக்கட்டத்தை நோக்கி நெருங்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆளுகை செய்யும் கர்த்தர் நம் காலத்தில் நம் தலைமுறையில் ஈடுபட நமக்கு சவாலிடுகிறார். நம்மை அழைக்கிறார். ❖❖❖❖❖❖❖❖❖❖❖

# முக்கிய அறிவிப்பு:

‘ என்னோடு **தொலைபேசியில்** தொடர்புக்கொள்ள முடியாதவர்கள், **கடிதங்கள்**மூலம் ஜெபகுறிப்புகளையும், குடும்ப பிரச்சனைகளையும் அனுப்பலாம்.

‘ இ-மெயில் மூலம் நீங்கள் எனக்கு எழுதினாலும் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் தயவுசெய்து குறிப்பிட்டால், கடிதம்மூலமாக பதில் எழுத இயலும். வாரம் இரண்டு நாட்கள்மட்டும் வீட்டில் நான் இருப்பதால் நீங்கள் அனுப்பும் இ- மெயில்க்கு கடிதம்மூலம் என் பிராயணத்தில் உடனே பதில் எழுதமுடியும். அதனால் இ-மெயில் அனுப்புபவர்கள் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் அனுப்புங்கள்.

## காணிக்கை

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.

# CSI TAMIL PARISH-DUBAI












**அரேபியாவிலுள்ள UAE நாடுகளில் Dubai, Ras- Al-Khaimah, Fujairah ஆகிய இடங்களில் நடந்த CSI கன்வென்ஷன்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தன. எல்லா இடத்திலும் மக்கள் வசனத்தை கேட்க மிக ஆவலாக இருந்ததைக்கண்டு தேவனை துதித்தேன்.**

**அநேக ஆண்டுகளுக்குமுன் நான் துபாய் மலையாள CSI சபைக்கு கன்வென்ஷனில் பேச வந்தபோது துபாயில் உள்ள CSI தமிழ் கிறிஸ்தவர்கள் என்னை சந்தித்து துபாயில் ஒரு CSI தமிழ் சபை தொடங்க ஆசைப்பட்டு என்னிடம் பகிர்ந்துக்கொண்டனர். உடனே அவர்களை எழுத்து மூலமாக விண்ணப்பம் எழுதி கொண்டுவர சொன்னேன். மறுநாள் மத்திய கேரளா CSI பிஷப் Rt.Rev.ஜோசப் அவர்கள் என் கூட்டத்துக்கு தலைமைதாங்க வந்தார். உடனே அவரிடம் தமிழ் CSI மக்களின் விவரத்தைக்கூறி மலையாள CSIஆயரை தற்காலிகமாக தமிழ் CSI சபைக்கு திருவிருந்து அளிக்கவும், மலையாள CSI சபை கட்டிடத்திலேயே துபாய் தமிழ் CSI சபை தொடங்கவும் அப்போதே பிஷப் அவர்கள் ஜெபித்து அங்கீகாரமும் அளித்தார். இப்படித்தான் தமிழ் துபாய் CSI உருவானது.**

**அதன்பின் பல ஆயர்கள் வந்துப்போனார்கள். துபாய் சபை மக்கள் மிஷனரி பாரம் கொண்டவர்கள். ஏராளமான இந்திய மிஷனரிகளை இப்போதும் தாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.**

**இப்போதுள்ள ஆயர் Rev.S.Christopher Rathnasamy அவர்களும், சபை உதவி தலைவர் திரு. SK.Pushparaj அவர்களும் பொருளாலர் திரு. Singarathinam அவர்களும் சபையை சிறப்பாக நடத்திசெல்கிறார்கள். கிளை சபை Fujairah - Ras al Khaimah ஆகிய இடங்களுக்கும் நான் சென்று கர்த்தருடைய செய்தியை பகிர்ந்துக்கொண்டேன். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.**






# இந்திய வட கிழக்கு மாகாணங்கள் கவனிக்கப்படுகின்றன.

இந்திய வடகிழக்கு மாகாணங்களான **நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, திரிபுரா** ஆகிய மாநிலங்கள் இத்தனை காலம் நம் இந்தியாவில் தான் இருக்கிறதா என்று நம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கே விளங்காமல் இருந்தது. பத்திரிக்கைகளிலும் அந்த மாநில செய்திகள் அதிகம் வருவதில்லை. ஆனால் சமீப காலமாக நம் இந்திய அரசாங்கம் விரிவாக கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. காரணம் **சீன** எல்லையும், **நேபாள** எல்லையும், **வங்கதேச** எல்லையும் சுமால் 50 கி.மீட்டர் இடைவெளியில் **சிலிகுரி** என்ற இடம் அமைந்துள்ளது. அண்டை நாட்டு அபாயம் மறைமுகமாக தாக்குதல்கள் தொடர்ந்து வரத்தொடங்கிவிட்ட நிலையில் எல்லை மாநிலங்களின் பொறுப்பு தாங்கள் இந்தியர்கள் தான் என்ற சந்தேகம் அந்த குறிப்பிட்ட மாநிலங்களில் உள்ள இளம் சந்ததியினருக்கு வந்துவிட்டது. ந்த சூழ்நிலையில் நம் **இந்திய ஜனாதிபதி** வடமாநிலங்களுக்கு அடிக்கடி சென்று வருவது நல்ல எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. இத்தனை காலம் அந்த மாநிலங்கள் கவனிக்கப்படாததற்கு காரணம் கலாச்சார இந்தியாவில் வாழும் பெருவாரியான மக்கள் **கிறிஸ்தவ** மதத்தினராக இருப்பதாகும். ஆதிவாசிகளும், புத்த மதத்தினரும் வசித்த அந்த மாநிலங்கள் பாப்டிஸ்ட் கிறிஸ்தவ சபை மிஷனரிகளின் கடினமான ஊழியத்தால் ஆதிவாசிகள் **மனிதர்களை கொல்வதை** நிறுத்தி, **இயேசுவை** குலதெய்வமாக ஏற்று மனம் திருந்தி வாழ்கிறார்கள். மிஷனரிகளின் முயற்சியால் ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள், சுயதொழில் கல்வி திட்டங்கள் பெருகின. இங்கு மத மாற்றம் பெருமளவு ஏற்பட்டுள்ளது என்றாலும் அதற்கு காரணமான கிருத்துவ மிஷனரிகளை பாராட்டமால் இருக்க முடியாது என்று இந்த மத இயக்க தலைவர்களே கூறுகிறார்கள். பெரும் மலைகளும், அடர்ந்த காடுகளும் நிறைந்த இந்த மாநிலங்களில் இப்போதுதான் சாலை வசதிகளுக்கும், ரயில் வசதி, விமான போக்குவரத்துக்கும் திட்டங்கள் இட ஆரம்பிந்துள்ளார் கள். இந்த திட்டம் மட்டும் தள்ளிபோடாமல், தாமதப்படுத்தாமல் அவசாரகால முறையில் இந்திய அரசங்கம் செயல்படுத்துமானால் அந்த மாநிலத்தவர் நாங்களும் இந்தியர்கள் என்று உரிமையோடு கூறுவார்கள். நான் சுமார் 20 வருடங்களுக்கு முன் AMSTORDAM (HOLLAND) (படிவத்தில்) நடந்த Dr. **பில்லிகிரஹாம்** அவர்கள் ஏற்பாடு செய்த கிறிஸ்தவ மாநாட்டிற்கு சென்றபோது வட கிழக்கு மாகாணத்திலிருந்து வந்தவர்களை நோக்கி நீங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்ற கேள்விக்கு நாங்கள் மணிப்பூர், நாகாலாந்து, மேகாலயா என்றுதான் கூறினார்களே தவிர நாங்களும் இந்தியாவிலிருந்து தான் வந்திருக்கிறோம் என்று ஒருவரும் கூறாதது இந்தியாவுக்கு நல்லதல்ல. அப்படி அவர்கள் கூறகாரணம் இந்திய அரசாங்கம் அந்த மாநிலங்களுக்கு குறிப்பிடதக்க உதவி, குறிப்பாக சாலை வசதிகள்கூட செய்து தரவில்லை. இங்குள்ள அருமையான நல்ல ஆவிக்குரிய மக்களுக்காக (சொல்வோம்) இதர மாநிலங்களுக்கு சுமார் 30 வருடங்களுக்குமுன் சென்றேன். ஒரு உயர்நிலை பள்ளி மண்டபத்தில் என் கூட்டம் நடந்தது. சாதாரண டீ கடையில் டீ வாங்கி குடிப்பவர்கள்கூட கையில் தேநீர் கிடைத்தவுடன் சிறு ஜெபம் செய்துவிட்டுதான் குடிக்கிறார்கள். எத்தனை அற்புதமான காட்சி அது!

# மரண அறிவிப்பு:



சேலம் Holy Trinity Church CSI சபையின் ஆரம்ப கால அங்கத்தினர்களில் ஒருவரும், ஆரம்ப பள்ளியில் என்னோடு படித்த பழங்கால நண்பருமான **சகோ.பிலிப்ஸ்** அவர்கள் தனது 75வது வயதில் நவம்பர் மாதம் காலமானார்.

சகோதரனின் மனைவி,பிள்ளைகள் யாவருக்கும் கர்த்தர் ஆறுதல் தந்து உதவுவாராக.

# சகோ.ஸ்டான்லி பிரின்ஸ் அவர்கள் கர்த்தருக்குள் நித்தியடைந்தார்.



சகோ.ஸ்டான்லி பிரின்ஸ் அவர்கள் **ஸ்ரீவில்லிபுத்தூர்** மேல்நிலைப்பள்ளி ஆசிரியராக இருந்து வாலிப வயதில் மனந்திரும்புதலின் அனுபவத்தை பெற்று 1979ம் வருடம் தன் ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்து FMPBயின் முழுநேர பணியாளராகி, FMPBயில் ஆவிக்குரிய செய்தியாளராக தமிழ்நாடெங்கும் குறிப்பாக வாலிபர் கூடுகையில் அதிகம் உபயோகிக்கப்பட்டார். ஏராளமான வாலிபர்கள் இவர் கூட்டத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு இன்று மிஷனரிகளாகவும், மற்ற ஊழியங்களிலும் சிறந்து விளங்குகின்றனர்.

பிரசங்கத்தில் பாவத்தை மிகவும் கண்டித்து உணர்த்தி பேசக்கூடியவர். யாரானாலும் சங்கோஜப்படாமல் தைரியமாய் குறைகளை சுட்டிக்காட்டி ஆலோசனைக்கூறுவதிலும், பிரசங்கிப்பதிலும் தாலந்து பெற்றவர். மரணம்வரை விசுவாசத்தில் உறுதியாகவும்,ஊழியத்திலும், வாழ்க்கையிலும், சாட்சியாகவும் வாழ்ந்து கர்த்தரின் கரத்தில் தன்னை ஒப்படைத்து தன் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தார்.

அவர் சாட்சியுள்ள வாழ்க்கைக்காக, ஊழியத்துக்காக,அவரின் பிரசங்க தாலந்துகளுக்காக தேவனைத் துதிக்கிறேன். சகோதரனின் மனைவி, பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். கர்த்தர் அவர்களுக்கு ஆறுதலை அளிப்பாராக.

## USA - CHICAGO CHRIST TAMIL CHURCH MEETING

CHRIST TAMIL CHURCH**என்ற பெயரில் புதியதாய் தொடங்கியுள்ள சபையில் நடந்த என் கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.**

**புகைப்படங்கள் கிடைக்காததால் இம்முறை புகைப்படம் வெளியிடமுடியவில்லை.** Mr.APPU. **சபையின் பொருப்பாளர் கூட்ட ஏற்பாடுகளை நன்றாக செய்திருந்தார்.**

**ஆயர் இல்லாமல் இருந்தும் கூட்டங்கள் முறைப்படி மிக நல்லமுறையில் நடந்தேறின.சிக்காகோ நகரில் பேசின செய்திகள் மிகவும் பிரயோஜனமாக அமைந்ததால் சிக்காகோ சபையினர் என் செய்திகளை உடனே** You-Tube**ல் வெளியிட்டார்கள். அதை பார்த்து ஏராளமானவர்கள் எனக்கு கடிதங்கள் எழுதியருந்தனர். கர்ததர்தாமே சபை மக்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.**



# உலகத்திலுள்ள அனைவருக்கும் சந்தோஷத்தை கொடுக்கும் நல்ல செய்தி:

பாவ விமோச்சகர் மனிதர்களின் பாவ மன்னிப்புக்கென்று உலகில் பிறந்து-மரித்து- உயிர்த்து- இப்போதும் உயிரோடு இருக்கும் தெய்வம் இயேசுகிறிஸ்து மட்டுமே.



இயேசுகிறிஸ்துவின் நாமம்:

| | | |
|---|---|---|
| அதிசயமானவர் | - | Wonderful |
| ஆலோசனைக் கர்த்தர் | - | Councellor |
| வல்லமையுள்ள தேவன் | - | Mighty God |
| நித்திய பிதா | - | Everlasting Father |
| சமாதானப்பிரபு | - | Prince of Peace |

ஏசா

**இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் யாவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் -**

**-ஜாமக்காரன் குடும்பம்**

DECEMBER 2015

# Printed Book/Book Post

**Return Requested:**


**Dr.PUSHPARAJ**

**SALEM - 636 005**

**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.